பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 07 2024 12 40
வியாழக்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள்

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய முக்கிய உரைகளின் தொகுப்புநூல் இன்று புதுதில்லியில் வெளியிடப்படுகிறது.
- சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு நம் அனைவருக்கும் இருக்க வேண்டியதன் அவசியத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்சர் வலியுறுத்தியுள்ளார்.
- இளங்கலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை இன்று உச்சநீதிமன்றத்தில் நடைபெறுகிறது.
- சத்திஷ்கர் மாநிலத்தில் சிறப்பு அதிரடிப்படையினர் மீது
    - மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு வீரர்கள் வீரமரணமடைந்தனர்.
- தாய்லாந்தில் நடைபெற்று வரும் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மல்யுத்தப் போட்டியில் இந்திய அணி இதுவரை 14 பதக்கங்களை வென்று முதலிடத்தில் உள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது பதவிக் காலத்தின் முதல் ஆண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய முக்கிய உரைகளின் தொகுப்புகள் அடங்கிய புத்தகம் இன்று வெளியிடப்படுகிறது.

புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌஹான், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர் இந்த மின்னணு புத்தகத்தை வெளியிடுகின்றனர்.

இதில் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய 75 முக்கிய உரைகள் இடம்பெற்றுள்ளன.

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பதிப்பகப் பிரிவு இதனை வெளியிடுகிறது.

ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் இந்த நூல் அமைந்துள்ளது.

[]<<<>>>[]

சுகாதார குறித்த விழிப்புணர்வு நம் அனைவருக்கும் இருக்க வேண்டியதன் அவசியத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்சர் வலியுறுத்தியுள்ளார்.

மொரீஷியஸ் நாட்டில் மக்கள் மருந்தகத்தின் வெளிநாட்டு கிளையை அவர் திறந்து வைத்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் மக்கள் மருந்தகங்கள் செயல்படுத்தப்படுவதாகக் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான சுகாதார திட்ட பரிமாற்றங்கள் மூலமாக இந்தியாவில் தயாராகும் விலைக் குறைவான மருந்துகளை மொரீஷியஸ் நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொரீஷியஸின் கிரான்ட் போயீஸ் பகுதியில் மருத்துவமனை ஒன்றையும் திரு ஜெய்சங்கர் திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் இத்தாலியில் நடைபெறும் ஜி-ஏழு வர்த்தக அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் இன்று பங்கேற்கிறார்.

உறுப்பு நாடுகள் இடையேயான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் அவர் விவாதிக்கிறார்.

செமிகண்டக்டர்கள், மருந்துகள், பசுமை எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து திரு பியூஷ் கோயல் ஆலோசனை நடத்த உள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

இளங்கலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை இன்று உச்சநீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு டி ஒய் சந்திரசூட், நீதிபதிகள் திரு ஜெ பி பர்திவாலா, திரு மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கு விசாரணையை மேற்கொள்கிறது.

நீட் தேர்வை மீண்டும் நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட 40 மனுக்கள் மீது உச்சநீதிமன்றம் விசாரணை நடத்தி வருகிறது.

நீட் தேர்வுக்கு எதிராக பல்வேறு உயர்நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டுமென்று தேசிய தேர்வுகள் முகமை தாக்கல் செய்த மனுவும் இதில் அடங்கும்.

[]<<<>>>[]

உச்சநீதிமன்ற நீதிபதிகளாக திரு ஆர் மகாதேவன், திரு என் கோட்டீஸ்வர் சிங் ஆகியோர் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

அவர்களுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு டி ஒய் சந்திரசூட் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இதையடுத்து உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 34-ஆக உயர்ந்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக திரு கிருஷ்ணகுமார் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்த திரு மகாதேவன் உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டதை அடுத்து, திரு கிருஷ்ணகுமார் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

[]<<<>>>[]

சத்திஷ்கர் மாநிலம் பிஜப்பூர், சுக்மா மாவட்டங்களில் சிறப்பு அதிரடிப்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு வீரர்கள் வீரமரணமடைந்தனர். நான்கு வீரர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு சத்திஷ்கர் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் முழுமையாக அகற்றப்படும் வரை அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும் என்று அவர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மாநிலம் முழுவதும் தமிழக அரசு சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதையொட்டி முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தமிழக மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக காணொலி பதிவு ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

[]<<<>>>[]

காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்படுவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இன்று காலை நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து 24 ஆயிரம் கன அடியாக இருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( சவுண்ட்பைட் - விஜயகுமார் ) -48---- செகண்ட்*

இதனிடையே ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வரும் தண்ணீரின் அளவும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இன்று நண்பகல் நிலவரப்படி வினாடிக்கு 35 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இதன் காரணமாக காவிரி கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் மூன்றாவது கட்ட அகழாய்வு பணியின்போது முழு வடிவ சங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சங்கு வளையல் தயாரிப்பு கூடம் இங்கு இருந்தது இரண்டாம் கட்ட அகழாய்வு உறுதி செய்துள்ள நிலையில், இந்த சங்கு கிடைத்துள்ளது கூடுதல் சான்றாக அமைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - கமலக்கண்ணன் ) -36-- செகண்ட்*

[]<<<>>>[]

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே நீடித்து வரும் சண்டைக்கு உடனடி அரசியல் தீர்வு காண வேண்டியது அவசியம் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு ஆண்டனியோ குடாரஸ் வலியுறுத்தியுள்ளார்.

காஸா விவகாரம் தொடர்பாக ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் நடைபெற்ற விவாதத்தின் முடிவில் சர்வதேச சட்டங்களின் படி இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்றும், இந்த விவகாரத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று பாதுகாப்பு கவுன்சில் கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

கர்நாடகாவின் தெற்குப் பகுதி, கடலோரப் பகுதி, குஜராத் மாநிலத்தில் சௌராஷ்டிரா, கட்ச் மற்றும் மகாராஷ்டிராவில் கொங்கன், கோவா உள்ளிட்ட பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, கடலோர ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளின் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்ட், குஜராத் மற்றும் கிழக்கு ராஜஸ்தான் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

இதனிடையே தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகளின் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தாய்லாந்தின் **Sriracha**-யில் நடைபெற்று வரும் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மல்யுத்தப் போட்டியில் இந்தியா இதுவரை 14 பதக்கங்களை வென்று முதலிடத்தில் உள்ளது.

இப்போட்டியின் மகளிர் பிரிவில் 33 கிலோ எடைப்பிரிவில் ரோகினி காணு-வும், 58 எடைப் பிரிவில் ஆயுஷ்கார் கடேகரும், 62 கிலோ எடைப்பிரிவில் ருவீனும், 66 கிலோ எடைப்பிரிவில் கரீமாவும் தங்கப்பதக்கம் வென்றனர்.

36 கிலோ எடைப்பிரிவில் வினாட்சியும், 39 கிலோ எடைப்பிரிவில் கஸ்தூரியும், 46 கிலோ எடைப்பிரிவில் ருதுஜாவும், 50 கிலோ எடைப்பிரிவில் கனிஷ்காவும், 54 கிலோ எடைப் பிரிவில் மோனியும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இதுவரை இந்திய மகளிர் அணி பத்து பதக்கங்களையும், ஆடவர் அணி நான்கு பதக்கங்களையும் வென்றுள்ளன.

[]<<<>>>[]

பிரான்ஸில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை கயிறு ஏறுதல் போட்டியில் இந்தியாவின் தீபு மல்லேஸ் கவுடா தேசிய சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியில் ஐந்து புள்ளி ஏழு ஒன்று நொடிகளில் நிர்ணயிக்கப்பட்ட உயரத்தைக் கடந்து அவர் இந்த சாதனையை புரிந்துள்ளார்.

[]<<<>>>[]

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஷ்ணு வரதன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

[]<<<>>>[]

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் சகாஜா யமலப்பள்ளி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

[]<<<>>>[]